REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 நவம்பர் 12 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 88 இல. 269 | November 12,Thursday, 2020 | 20பக்கங்கள் | 30/-

வீட்டிலிருந்தவாறு மொபிடெல் உடன் இணைந்து வேலை செய்யுங்கள், கல்வி பயிலுங்கள்
25GB ரூபா. 150/-
+ வரிகள்
செயற்படுத்துவதற்கு அழையுங்கள் #170#
*விசேடமாக தெரிவு செய்யப்பட்ட பிளேட்போம்களுக்கு மட்டுமே
TRC/M/Promo/20/02
Sri Lanka Telecom Mobitel



## தொற்றா நோயுள்ளோர் கொரோனாவில் மரணிப்பது குறித்த அவதானம் அவசியம்

### விசேட செயலணிக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு

தொற்றா நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை கொவிட் நோய்த்தொற்றில் இருந்து பாதுகாப்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஏனைய நாடுகளைப் போன்று எமது நாட்டிலும் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் எண்ணிக்கையில் 06

## இலங்கை வரலாற்றில் வரவு-செலவு திட்டம் சமர்ப்பிக்கப்படாதது 2020 இல்!

### பாராளுமன்றத்தில் இன்று பிரதமர் விளக்கமளித்து விசேட உரை

இலங்கையின் வரவு செலவுத் திட்ட வரலாற்றிலே வரவு செலவு திட்டமொன்று சமர்ப்பிக்கப்படாத வருடமாக 2020ம் ஆண்டு திகழ்கிறது.

இந்த வருடத்தில் அரசாங்கத்தின் வருமானம் மற்றும் செலவுகளை மேற்கொண்ட முறைகளை விளக்கும் வகையிலான விசேட அறிக்கையொன்றை பிரதமரும் நிதியமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார். 06

## இலங்கை – இந்திய சமூக அபிவிருத்தி திட்ட ஒப்பந்தம்



இந்திய நிதி உதவியின் கீழ் 600 மில்லியன் ரூபாவுக்குமதிகமான செலவில் இந்நாட்டில் செயற்படுத்தப்படும் சமூக அபிவிருத்தி திட்டத்திற்காக இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே (10) செவ்வாய்க்கிழமை புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர்.ஆட்டிகல மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் 06

## மட்டக்களப்பில் ... கொரோனாவை






### மட்டு. அபிவிருத்திக் குழுவின் தலைவர் சந்திரகாந்தன் சூளுரை

மட்டக்களப்பில் பரவும் கொரோனா தொற்றை தடுத்து மக்களை பாதுகாத்துக் கொண்டு அதனோடு கிராமிய பொருளாதாரத்தை வளர்த்தெடுப்பது எங்களுடைய நோக்கமாகும்.

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத்தலைவர் காரியாலயம் மாவட்ட செயலகத்தில் நேற்று பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,...

உலகளாவிய ரீதியில் பெரும் சவாலாக இருக்கும் கொரோனா தொற்றானது, மட்டக்களப்பு மாவட்டத்திலும் வந்துள்ளது. இந்த விடயங்களை 06



### 2021 வரவு – செலவுத் திட்டம்;

## விவாதத்தை 21 நாட்களுக்கு மட்டுப்படுத்த தீர்மானம்




2021ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இதனை 19 நாட்கள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு தீர்மானித்துள்ளது. இதற்கமைய எதிர்வரும் 18ஆம் திகதி 06

## ISS அமைப்பினர்கள் எவரும் இலங்கைக்குள் நுழையவில்லை

### UK சன் செய்தியை இராணுவத் தளபதி நிராகரிப்பு

ISS அமைப்பின் மிகவும் ஆபத்தான உறுப்பினர்கள் இலங்கைக்குள் நுழைந்துள்ளனர் என வெளியான தகவல்களை இலங்கை இராணுவம் நிராகரித்துள்ளது. பிரித்தானியாவின் சன் 



செய்தித்தாளில் வெளியான செய்தியை இராணுவத்தளபதி நிராகரித்துள்ளார்.

அவ்வாறான ISS உறுப்பினர்கள் இலங்கைக்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் 06

## மேல் மாகாணத்திலிருந்து வெளியே செல்ல முடியாது

### இராணுவத் தளபதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மேல் மாகாணத்திலிருந்து எவரும் வெளிச் செல்ல முடியாது என அரசாங்கம் நேற்று அதிரடி அறிவிப்பை விடுத்துள்ளது.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நேற்று மாலை முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி நள்ளிரவு வரை மேற்படி தடையை அரசாங்கம் விதித்துள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார். நாட்டில் நிலவும் கொரோனா 06

## கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை 15,024 ஆனது

### 45ஆவது மரணமும் நேற்று பதிவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மேலும் மூன்று மரணங்கள் நேற்று இடம்பெற்றுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு - 10 மாளிகாவத்தை பகுதியை சேர்ந்த 68 வயதான பெண்ணும்

கொழும்பு - 11 பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய ஆண் ஒருவரும் களனி பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்வாறு மரணமடைந்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை நேற்றுடன் 45ஆக அதிகரித்துள்ளது. மினுவாங்கொடை கொரோனா வைரஸ் கொத்தணி மூலம் 11,237 பேர் இது வரை இனங்காணப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு 06

### முஸ்லிம்களின் சடலங்கள் நல்லடக்க விவகாரம்;

## உரிய தீர்வு கிடைக்கும் வரை பொறுமையுடன் துஆ பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டுகோள்

### பிரதமரின் முஸ்லிம் விவகார ஒருங்கிணைப்பு செயலாளர் அப்துல் சத்தார்

**மர்லின் மரிக்கார்**

கொவிட் 19 தொற்றுக்குள்ளாகி மரணமடையும் முஸ்லிம்களின் ஜனாஸா நல்லடக்க விவகாரம் தொடர்பில் உரிய தீர்வு கிடைக்கப்பெறும் வரையும் முஸ்லிம்கள் பொறுமை காத்து துஆ பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டும் என்று பிரதமரின் முஸ்லிம் விவகார



ஒருங்கிணைப்பு செயலாளரும் குருநாகல் மாவட்ட இணைப்பாளருமான அப்துல் சத்தார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பில் உரிய தீர்வு கிடைக்கப்பெற முன்னர் முஸ்லிம்களில் சிலர் பொறுப்பற்ற முறையில் சமூக ஊடகங்களில் மேற்கொள்ளும் பதிவுகள் தேவையற்ற தாமதங்களையும் பாதிப்புக்களையும் 06

## வெள்ளை சீனியின் சில்லறை விலை ரூ.85

### பொதி செய்திருந்தால் மட்டுமே ரூ.90

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வெள்ளைச் சீனி ஒரு

## தனியார் பஸ் கட்டணம் 1.2 வீதத்தால் அதிகரிப்பு

### ஆகக் குறைந்த கட்டணம் 14 ரூபா

**லோரன்ஸ் செல்வநாயகம்**

### லேடி ரிஜ்வே வைத்தியசாலைக்கு

## நோயாளிகள் அச்சமின்றி சிகிச்சைக்கு வரலாம்

**லோரன்ஸ்**



### 14 நாள் கால அவகாசம் நிறைவு;

## விளக்கமளிக்காது காலம் கடத்திவரும் அரவிந்தகுமார்